# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.187/2019 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா– 09 ( PW– 09 ) |
| **பெயர்** | :– | **சதீஸ்குமார்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | **மணி** |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

01–ஆம், 04–ஆம், 05–ஆம், 07–ஆம், 08–ஆம் எதிரிகள் தோன்றினார்கள். 03–ஆம், 05–ஆம் எதிரிகள் தோன்றவில்லை. மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:-**

நான் சேலத்தில் வசிக்கிறேன். கட்டடங்களுக்கு குடிநீர் குழாய் பதிப்பது மற்றும் மின்சார வேலை செய்வது போன்ற தொழில்களை செய்து-வருகிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளை எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன அமிர்தராஜை எனக்குத் தெரியாது. இந்த வழக்குச் சம்மந்தமான விவரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது. காவல் துறையினர் என்னிடம் சுமார் 06 ஆண்டுகளுக்குமுன் ஒருநாள் என்னுடைய முகவரியை கைப்பேசி மூலம் கேட்டனர். காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

எனக்கு மேட்டூரில் மின்நகரில் ஒரு மெத்தை வீடு உள்ளது என்றால் சரிதான். அதை நான் பின்னிட்டு விற்றுவிட்டேன். துர்கா என்பவரிடம் விற்றேன். சுமார் 05 ஆண்டுகள் இருக்கும். அந்த வீட்டின்மீது சேலம் சுந்தரம் நிதி நிறுவனத்தில் 14 இலட்சம் உரூபாய் அடைமான கடன் பெற்றிருந்தேன் என்றால் சரிதான். அந்த கடனை அடைக்க அந்த வீட்டை விற்றேன். நான் மேட்டூரை சேர்ந்த ஸ்டாலின் ஜெயக்குமாரிடம் 5 இலட்சம் உரூபாய் கடன் வாங்கியிருந்தேன் என்றால் சரிதான். அவர் நீதிமன்றத்தில் உள்ளாரா என்றால் 05 ஆண்டுகளுக்குமேல் ஆவதால் எனக்கு அடையாளம் தெரிய-வில்லை.

சுந்தரம் நிதி நிறுவனத்தில் வாங்கிய கடனை அடைப்பதற்காக ஸ்டாலின் ஜெயக்குமாரிடம் மேற்சொன்ன வீட்டை பிணையத்திற்காக கிரயப் பத்திரம் எழுதிக் கொடுத்து பணம் வாங்கினேன் என்றால் சரியல்ல.

நான் வட்டியும் முதலுமாக 21 இலட்சம் உரூபாயை ஸ்டாலின் ஜெயக்குமாரிடம் கொடுத்து கிரயத்தை இரத்து செய்து கொடுக்குமாறு கேட்டேன் என்றும் அவர் முடியாது என்று மறுத்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் நான் ஸ்டாலின் ஜெயக்குமாருக்கு எதிராக காவல் உயர் அதிகாரிகளிடம் மனு கொடுத்தேன் என்றால் இல்லை. என்னுடைய புகார்மீது கருமலைக்கூடல் காவல் நிலையத்தினர் என்னையும் ஸ்டாலின் ஜெயக்குமாரையும் அழைத்து விசாரித்தனர் என்றால் இல்லை.

அதன்பிறகு என் தகப்பனார் மேற்சொன்ன வீட்டின் வழியாக சென்ற -போது உங்கள் தகப்பனாரை ஸ்டாலின் ஜெயக்குமாரும் அவருடைய ஆட்களும் அடித்துவிட்டனர் என்றும் அதுச் சம்மந்தமாக என் தகப்பனார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது காவல் துறையினரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் கிரயம் கொடுத்த வீட்டை எனக்கே திருப்பி கொடுப்பதாக ஸ்டாலின் ஜெயக்குமார் என்னிடம் சொன்னார் என்றும் அதனால் அந்த வழக்கில் சமாதானமாக சென்று -விட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. அதுச் சம்மந்தமாக பேசுவதற்கு கொலையுண்ட அமிர்தராஜை ஸ்டாலின் ஜெயக்குமார் என்னிடம் அறிமுகம் படுத்தினார் என்றால் இல்லை. அமிர்தராஜ் என்னிடம் பணத்தை திரட்டுங்கள் என்றும் ஸ்டாலின் ஜெயக்குமாரிடம் பேசி முடித்து வைக்கிறேன் என்றும் நான் ஸ்டாலின் ஜெயக்குமாரிடம் பல பிரச்சனைகளை பேசி முடித்துள்ளேன் என்றும் சொன்னார் என்றால் இல்லை. நான் மீண்டும் ஸ்டாலின் ஜெயக்குமார்மீது மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. அந்த புகாரை திருப்ப பெற்றுக் கொள்ளுமாறும் நான் உங்களுக்கு ஸ்டாலின் ஜெயக்குமாரிடமிருந்து கிரயம் வாங்கிக்

கொடுக்கிறேன் என்று அமிர்தராஜ் என்னிடம் சொன்னார் என்றும் சொன்னால் சரியல்ல.

மேற்சொன்ன சூழ்நிலையில்தான் 19.12.2017-ஆம் தேதியன்று நீங்கள் ஆந்திராவில் இருந்தபோது ஸ்டாலின் ஜெயக்குமார் தூத்துக்குடியில் இருந்து கூலி படையை வரவழைத்து அமிர்தராஜை மேட்டூர் இந்துஸ்தான் தாபா உணவகத்தில் வைத்து வெட்டி கொலை செய்ததாக கேள்விப்பட்டதாக புலனாய்வு அதிகாரியிடம் சொன்னேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.